பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 02 வெள்ளிக்கிழமை (16.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 109

### மட்டக்களப்பில் இதுவரை 1,30,000 அகதிகள்; அந்த எண்ணிக்கை மேலும் உயரலாம் என அச்சம்

# சர்வதேச தொண்டு அமைப்புகளிடம் உடனடி நிதி உதவி கோரி ஐ.நா. அவசர வேண்டுகோள்

கொழும்பு, மார்ச்16

**மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து இடம்பெயர்ந்து வரும் அகதிகளுக்கு உதவுவதற்குத் தேவையான நிதி தம்வசம் இல்லை என்றும், இந்த மனிதாபிமான உதவியைச் செய்வதற்கு உடனடியாக நிதி உதவி வழங்குமாறும் சர்வதேச உதவி நிறுவனங்களுக்கு ஐ.நா. அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.**

**ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் ஜோன் போம்ஸ் நேற்று இந்த அவசர வேண்டுகோளை விடுத்தார்.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயரும் அகதிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 30 ஆயிரத்தையும் தாண்டிவிட்டது.

அதனால் அவர்களுக்கு அவசர நிவாரண உதவிகளைச் செய்வதற்கு ஐ.நாவிடம் போதிய நிதி வளம் இல்லை. ஏனைய சர்வதேச அமைப்புக்கள் உடனடியாக உதவ முன்வர வேண்டும்.

இவ்வாறு ஐ.நா. மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் ஜோன் போம்ஸ் அவசர வேண்டுகோள் ஒன்றை நேற்று விடுத்துள்ளார்.

தொப்பிகல பகுதியில் 3ஆவது நாளாக தொடரும் வான் தாக்குதல்களால் மேலும் ஆயிரக்கணக்கான அகதிகள் இடம்பெயரலாம் என்றும் அவர் அச்சம் தெரிவித்தார்.

சர்வதேச அமைப்புக்களிடம் நிதி உதவி கோரி அவர் நேற்று வியாழக்கிழமை விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிழக்கிலங்கையில் புதிதாக அதிகரித்துவரும் வன் செயல்களால், இனிமேல் இடம்பெயர நேரிடும் ஆயிரக்கணக்கான மக்களின் நிலை குறித்து நான் மிகவும் அக்கறையும், கவலையும் கொண்டுள்ளேன்.

ஏற்கனவே மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயரும் மக்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தித்து 30 ஆயிரத்தையும் தாண்டி விட்டது.

அவர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்குத்தானும் ஐ.நாவிடம் போதிய நிதிவளம் இப்போது கையில் இல்லை.

இப்போது மிக அவசரமாகத் தேவைப்படுவது உணவுப் பொருள்களே. ஆனால் கிழக்கில் ஆகக் கடைசியாக இடம்பெயர்ந்தவர்களுக்கு தேவைப்படக்கூடிய உணவுப் பொருள் இருப்பு ஸ்ரீலங்காவில் இல்லை என்று உலக உணவுத் திட்டம் எமக்கு அறிவித்துள்ளது - என்று ஜோன் போம்ஸ் தமது அவசர அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையின் மனிதாபிமான நிறைவேற்றுத் திட்டத்திற்கென

(04ஆம் பக்கம் பார்க்க)

## இரவு 7மணி முதல் ஊரடங்கு அமுல்

யாழ்ப்பாணம், மார்ச் 16

குடாநாட்டில் சகல பகுதிகளிலும் இரவு 7 மணி முதல் அதிகாலை 4மணி வரை ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும் என யாழ். பாதுகாப்பு தலைமையக ஊடகப்பிரிவு நேற்றிரவு தெரிவித்தது.

நேற்று மாலை 7 மணிக்கு நடைமுறைக்கு வந்த ஊரடங்கு இன்று அதிகாலை 4மணிக்கு நீக்கப்படும் என்றும் - இன்றிரவு 7 மணிக்கு நடைமுறைக்கு வரும் ஊரடங்கு அதிகாலை 4 மணிக்கு நீக்கப்படும் என்றும் - மறு அறிவித்தல் வரை இந்த ஒழுங்கு தொடரும் என்றும்- ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்தது.(அ-1)

# கிழக்கு அகதிகளுக்கு உதவ இந்தியாவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள்!

### அந்நாட்டுத் தூதரைச் சந்தித்து எம்.பிக்கள் குழு நேரில் விளக்கம்

கொழும்பு, மார்ச்16

கிழக்கில் அரசுப்படைகள் முன்னெடுத்துள்ள இராணுவ நடவடிக்கைகளால் வாழ்விடங்களில் இருந்து துரத்தப்பட்டு பேரவலத்தில் சிக்கியிருக்கும் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்களுக்கு அவசர மனிதாபிமான உதவிகளை வழங்குமாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இந்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கிழக்கு மாகாண மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று இந்தியத் தூதரை கொழும்பில் நேரில் சந்தித்து இந்த அவசர கோரிக்கையை முன்வைத்திருக்கின்றனர்.

இதேபோன்றதொரு வேண்டுகோளை இலங்கைக்கான ஜேர்மன் நாட்டுத் தூதரிடமும் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்வைத்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அரியநேந்திரன், எஸ். ஜெயானந்தமூர்த்தி, க. தங்கேஸ்வரி ஆகியோர் நேற்று நண்பகல் இலங்கைக்கான இந்தியத்தூதர் அலோக்பிரசாத்தை தூதரக இல்லத்தில் சந்தித்தனர்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கு 906 மாணவர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். பல்கலைக்கழகத்துக்கு 2006 - 2007 ஆம் கல்வியாண்டுக்கு 906 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் இத்தகவலைத் தெரிவித்தார். புதிய மாணவர்களைப் பதிவுசெய்வதற்கான திகதிகள் விரைவில் அறிவிக்கப்படும். தெரிவான மாணவர்களின் விவரங்களை பல்கலைக்கழகத்தில் பார்வையிடலாம் என்றும் - அவர் தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட கல்வி ஆண்டுக்குத் தெரிவான மாணவர்களின் எண்ணிக்கை துறை ரீதியாக வருமாறு:-

மருத்துவம் - 69, சுகாதார விஞ்ஞானம் -19, சித்த மருத்துவம் -53, விவசாயம் -62, முகாமைத்துவம் -101, வர்த்தகம் -25, கலை -296, சட்டம் -17, இசை -48, நடனம் -38, சித்திரமும் வடிவமைப்பும் -29, கணனி விஞ்ஞானம் -12, பௌதீக விஞ்ஞானம் - 89, உயிரியல் விஞ்ஞானம் -48.

(அ-1-4-79)

## மட்டக்களப்பு 'அகதிகள் நகரம்' ஆகிவிட்டது; உண்மையை வெளிப்படுத்த முடியாத நிலை

### ஆயர் சுவாம்பிள்ளை கவலை

மட்டக்களப்பு, மார்ச்,16

மட்டக்களப்பு மாவட்டம் இடம்பெயரும் அகதிகளால் நிரம்பிவழிகின்றது. இந்த மாவட்டத்தை 'அகதிகள் நகரம்' என்றே கூறவேண்டியுள்ளது. மக்கள் படும் அவலம் பெரும்துயரைத் தருகின்றது.

- இவ்வாறு தமது கவலையை வெளியிட்டார் திருமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கலாநிதி கிங்ஸ்லி ஜோஸப் சுவாம்பிள்ளை ஆண்டகை.

கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரியின் (தேசியப் பாடசாலை) எஹெட் கரித்தாஸ் நிறுவனம் 62லட்சம் ரூபா செலவில் அமைத்துள்ள ''எஹெட் கரித்தாஸ்'' வகுப்பறைக் கட்டடத் தொகுதியின் திறப்பு விழா நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இத்திறப்புவிழா வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மறைமாவட்ட ஆயர் கலாநிதி சுவாம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ஸ்ரீபன் மெத்தியூ தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் எஹெட் நிறுவனப் பணிப்பாளர் அருட் தந்தை சில்வஸ்டர் சிறீதரன் கௌரவ அதிதியாகக் கலந்துகொண்டார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சு மூலம் தீர்வு காணும் அரசின் முடிவில் மாற்றமில்லை

### செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் யாப்பா

கொழும்பு, மார்ச் 16

இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பேச்சின் மூலம்தான் தீர்வுகாண முடியும் என்ற நிலைப்பாட்டில் இருந்து இலங்கை அரசு ஒருபோதும் மாறவில்லை. இன்றும் உறுதியாகவே இருக்கின்றது.

நாம் ஒருபோதும் சமாதானப் பேச்சை முறித்துக் கொள்ளவில்லை. புலிகள்தான் பேச்சு மேசையில் இருந்து வெளியேறினர்.

இவ்வாறு கூறுகின்றார் ஊடகத் துறை அமைச்சர் பிரிய தர்ஷன யாப்பா.

அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றின் போதே அமைச்சர் யாப்பா இதனைத் தெரிவித்தார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர்கள் பிரச்சினையை ஐ.தே.க. நாடாளுமன்றில் எழுப்பும்

### சென்னையில் ஜயலத் ஜெயவர்த்தனா

சென்னை, மார்ச், 16

இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல் பிரச்சினையை, ஐக்கிய தேசியக் கட்சி அடுத்த வாரம் இலங்கை நாடாளுமன்றத்தில் எழுப்பும்.

தமிழக மீனவர்களின் உயிர்ப்பிரச்சினைக்கு இலங்கை - இந்திய 'கூட்டு ரோந்து' ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வாக அமையும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன தெரிவித்திருக்கிறார்.

மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு சென்னை வந்திருக்கும் ஜயலத், நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசினார். அதன்போதே அவர் மேற்கண்ட தனது நிலைப்பாட்டை தெரிவித்திருக்கிறார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்:-

இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல் பிரச்சினையை, இலங்கையின் நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக்கட்சி அடுத்த வாரம் எழுப்பும். இலங்கை - இந்திய கடல் பகுதியில் இருநாட்டு கடற்படை வீரர்களும் 'கூட்டுரோந்து' மேற்கொண்டால் அதை வரவேற்கிறோம். அது ஒன்றே தமிழக மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வாக

(04ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸிக்கு தஞ்சம் கோரிச் சென்றவர்கள் பசுபிக் தீவில் உள்ள அகதி முகாமுக்கு

### 83 பேரில் எவருமற்ற ஒரு சிறுவனும்!

சிட்னி, மார்ச், 16

அரசியல் தஞ்சம் கோரிய நிலையில் கிறிஸ்மஸ்தீவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 83 இலங்கை அகதிகளையும் பசுபிக் தீவான நவ்றுவில் தடுத்து வைப்பது என்று ஆஸ்திரேலிய அரசு தீர்மானித்திருக்கின்றது. இவர்களில் மிகப் பெரும்பாலானோர் இலங்கைத் தமிழர்கள். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் ஆவர்.

நாட்டுக்கு வெளியே இவர்களைத் தடுத்துவைத்துப் பின்னர் அவர்களது தஞ்சக் கோரிக்கைகளைப் பரிசீலிப்பதற்கு தமது அரசு முடிவு செய்துள்ளது என்றும் சட்ட விரோதமாக ஆட்களைக் கடத்தி

(04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

அம்பாள் துணை

## மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில்

### பங்குனித் திங்கள் உற்சவம்

19.03.2007 முதலாம் திங்கள்
26.03.2007 2ஆம் திங்கள்
02.04.2007 3ஆம் திங்கள்
09.04.2007 4ஆம் திங்கள்

*காலை 6 மணியிலிருந்து மாலை 4 மணிவரையும் அபிஷேகம், பூசை உற்சவங்கள் நடைபெறும்.*

*வியாபாரம் செய்பவர்கள் மாலை 4 மணிவரை செய்யலாம். கடைகள் 17.03.2007 சனிக்கிழமை மு.ப. 10 மணியிலிருந்து பிரதேச சபையினரின் அனுமதியுடன் கொடுக்கப்படும். பணம் முழுவதும் உடன் கட்டிப்பெற்றுக்கொள்ளவும்.*

சி.சிவகுரு
தர்மகர்த்தா.

(58852)


## COMPUTER EXPRESS

Institute of Information Technology
Head Office : 15, Sirambiyadi Lane, Off Stanly Rd, Jaffna.
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna.
TP No : 021 222 8250 , 0777 222 422

### மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007

பதிவுகளிற்கு முந்துங்கள்

**80% OFF**

| பாட நெறிகள் | | | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 4மாதம் | [illegible] | 1,650 |
| Honours Diploma in Computer Science | - 5மாதம் | [illegible] | 2,100 |
| Diploma in Web Page Designing | - 4 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | [illegible] | 1,450 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | [illegible] | 1,450 |
| Accounting Package | - 3 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | [illegible] | 1,450 |
| MS Office | - 3 மாதம் | [illegible] | 1,000 |

**50% Off Advance Courses**

Diploma in Video Editing [illegible] 3250
Diploma in Multimedia [illegible] 2750

வகுப்புக்கள் ஆரம்பம் :-
Batch I - 16/03/2007
Batch II - 17/03/2007
Batch III - 18/03/2007
Batch IV - 21/03/2007

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.


We Serve

சுன்னாகம் அரிமா கழகம் நடத்தும்

## மருத்துவ முகாம்

நாளை (17.03.2007) சனிக்கிழமை மேற்படி மருத்துவ முகாம் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையில் நடத்தப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

இந் நிகழ்விற்கு கழகத் தலைவர்
லயன் ந.சண்முகவேல் (J.P.) தலைமை தாங்குவார்.

(58854)

## துயர் பகிர்கின்றோம்



எமது கோட்டக் கல்வி அலுவலர் சி.இராமலிங்கம் அவர்களின் மாமனும் பளை கிராம சேவை அலுவலர் திருமதி ராகினி இராமலிங்கம் அவர்களது தந்தையுமான

### செல்லப்பா சேனாதிராசா

(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், பளை)
அவர்களது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள்,
பளைக் கல்விக்கோட்டம்.

(58854)

## பிறந்த நாள் நினைவலைகள்

தோற்றம்
16 . 03 . 1967



மறைவு
30 . 11 . 2006

### ரங்கநாதன் பிரபாசங்கர் (குஞ்சுபபி)

காலத்தால் கரையாத உம் நினைவுகளுக்கு
கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

உசன்,
மிருசுவில்.

இன்றைய நாளில் நினைவு கூரும்
- குடும்பத்தினர்.

(58759)

## விற்பனைக்கு

6 அடி, 8 அடி கூரைச் சீற், கம்பஸ் மரம் மற்றும் 500 லீற்றர் தண்ணீர்த் தொட்டி(RPCO) என்பன விற்பனைக்குண்டு.தொடர்பு:
யாழ்.அக்கூரியம்,
தட்டாதெருச் சந்தி,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## உடன் தேவை

போட்டோ கொப்பி மெசின் (Sharp) தேவை. நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளப்படும்.
தொ.பே.:
021 4591638

## தவறிவிட்டது

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த பொ.தெய்வேந்திரன் என்பவருடைய மோட்டார்சைக்கிள் ஆவணங்கள் சாவகச்சேரிக்கும் யாழ்.பஸ் நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் முகவரியில் ஒப்படைத்து தவவும். சன்மானம் வழங்கப்படும்.
பொ.தெய்வேந்திரன்
(தபாலதிபர்)
அஞ்சலகம்,
சாவகச்சேரி.

## வீடு வாடகைக்கு உண்டு

சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. கனகரெத்தினம் மகாவித்தியாலத்திற்கு முன்பாக (ஸ்ரான்லி கல்லூரி) தொலைபேசி வசதியும் உண்டு.
தொடர்புகளுக்கு:
021 222 2896,
021 222 9635


## இந்தியாவில் கல்வி கற்கும் வாய்ப்பு
### பிருந்தாவன் கல்லூரி

பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது

கல்வி நெறிகள்
B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.

அடிப்படை தகைமை க.பொ.த (உயர்தர) 2 பாட சித்தி

பதிவுகள் தற்போது மேற் கொள்ளப்படுகின்றன

**Company Secretarial Services(Pvt.)Ltd.**

285C-1/1 Stanley Tillakaratne Mawatha, Nugegoda.
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்
தொலைபேசி இலக்கம் - 0777 317043


## மரண அறிவித்தல்

### செல்லையா சிவப்பிரகாசம்

(முன்னாள் அங்கத்தவர்,சாவகச்சேரி நகரசபை )



கற்குழி வடக்கைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மத்தியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவப்பிரகாசம் 14.03.2007 புதன்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சி.தையல் நாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அருளம்மா, யோகரத்தினம், சிவபாதசுந்தரம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவராசரத்தினம் (சிவராசா), செல்வரத்தினம், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பரத்தினம், மகேஸ்வரன், சங்கரப்பிள்ளை, மங்கையர்க்கரசி, தர்மராணி ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(58664)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
1945
02
17



மறைவு
2007
02
14

### சுப்பிரமணியம் பாலகிருஷ்ணன் (பாலன்)

ஓய்வுபெற்ற மின்சார சபை ஊழியர்

*இல்லத்தின் தலைவனாகி*
*இனியவர்க்கு இறைவனாகி*
*இறுதிவரை வாழாமல்*
*இடை வழியில் பிரிந்ததேனோ?*

*அன்போடு சேர்ந்திருந்து*
*அனைவரையும் வாழவைத்து*
*அவசரமாய் ஆண்டவனும்*
*அன்போடு அழைத்ததேனோ?*

45, நல்லூர் குறுக்குத் தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(58757)

## பிறருக்கு உதவுவதில் பின்னிற்காத ஆசிரியை

திருமதி

### லீலா நாகரத்தினம்

(B.A.London, முன்னாள் உப அதிபர், யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

சேவைக்காலம்
1943 - 1983 வரை



யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி வரலாற்றில் மிக நீண்டகாலம் அதாவது கல்லூரி ஆரம்பித்த காலமாகிய 10.09.1943 இலிருந்து 1983 வரை 40வருட காலம் அர்ப்பணிப்புடன் அயராது சேவையாற்றிய எமது அன்புக்கும், மதிப்புக்குமுரிய முன்னாள் ஆசிரியை அமரர் திருமதி லீலா நாகரத்தினம் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்.

அண்மையில் கனடாவில் அமரத்துவம் அடைந்தார் என்ற செய்தியைக் கேள்வியுற்று ஆறாத்துயரடைந்தோம். அவரது இழப்பு அனைவருக்கும் தாங்கமுடியாத பேரிழப்பாகும்.

லண்டன் பி.ஏ. பரீட்சையிற் சித்தியெய்திப் பட்டதாரியான இவர் புவியியல், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பித்தவர். மிஸ்.பொன்னையாவாக ஆசிரிய சேவையை ஆரம்பித்த அவரின் புன்னகையுடன் கூடிய மலர்ந்த வதனம், கலகலப்பான பேச்சு, நிதானமாகவும் சாதுரியமாகவும் செயலாற்றும் திறமை ஆகியன மறக்கவே முடியாதன. பிறருக்கு உதவிசெய்வதில் என்றுமே பின்வாங்க மாட்டார். அவருக்கு நிகர் அவரேதான்.

அவர் உப அதிபராகப் பதவிவகித்த காலத்தில் மாணவருடன் அன்பாகப் பழகுவது மட்டுமல்ல, ஆசிரியர் அனைவருடனும் மனம் நோகாதபடி நடந்தும், அவரவர் குறைகளைப் பொறுமையுடன் கேட்டறிந்தும் அவற்றை நிவர்த்தி செய்வார். அவரது மகளையும் எம் கல்லூரியில் சேர்த்து உயர் கல்வி கற்கும் வரை படிக்க வைத்தார். **"தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்"** என்பதற்கேற்ப அவரது இரு பிள்ளைகளும் கல்வியால் உயர்ந்து சிறப்புடன் வாழ்கின்றனர்.

தம் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்பும் எம் கல்லூரி ஆசிரியைகளைக் கண்டால் குசலம் வினாவி கல்லூரியின் வளர்ச்சி நிலைபற்றி ஆதங்கத்துடன் விசாரித்து அறிவார். பண்ணிசையில் அவருக்கும், அவரது கணவருக்கும் மிகுந்த ஈடுபாடு இருந்தமையால் எமது கல்லூரிப் பண்ணிசையில் ஆர்வமுள்ள மாணவருக்காக ரூபா 50,000ஐ அன்பளிப்புச் செய்துள்ளார். அவரது குடும்பத்தினருக்கு எமது நன்றிகள்.

தன் மகனிடம் கனடா போய்ச்சேர்ந்த சில காலங்களில் இறைவனடி சேர்ந்த செய்தி எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அன்புக்குரிய திருமதி லீலா நாகரத்தினம் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

பழைய மாணவர் சங்கம்,
யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

(58759)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

# புலி முத்திரை குத்தும் அரசியல் பாதையில் தெற்கு

'புலி முத்திரை' குத்துவதன் மூலம்தான் தென்னிலங்கையில் அரசியல் விடயங்கள் நகர்கின்றன போலும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இதனை விசனத்துடன் சுட்டிக்காட்டுகின்றார்.

முன்னர் உரிமைகளுக்காக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட சகல தமிழ்க் குழுக்களையும் முதலில் புலிகள் என்று முத்திரை குத்தினர்.

பின்னர் தமிழ்த் தேசியத்துக்குக் குரல் எழுப்பும் அனைவரையும் 'புலிகள்' என்றனர்.

அதற்குப் பின்பு தென்னிலங்கை பௌத்த, சிங்களத் தீவிரவாதத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் டக்ளஸ் தேவானந்தா, ஆனந்தசங்கரி தவிர்ந்த ஏனைய தமிழர்கள் அனைவரையும் 'புலிகள்' என்று முத்திரை குத்தினர். புலம் பெயர்ந்த நாடுகளில் வசிக்கும் தமிழர்கள், தாயக மண்ணில் வசிக்கும் தமிழர்கள் எல்லோரும் இந்த வலைக்குள் புலிகளாக்கப்பட்டனர்.

பின்னர் தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் கொடுக்கும் ஊடகவியலாளர்களை ஊடகப் புலிகள் என்று முத்திரை குத்தினர்.

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் சமரச முயற்சிக்கு அனுசரணைப் பணியாற்றும் நோர்வேயைப் பின்னர் 'வெள்ளைப் புலிகள்' என்றார்கள்.

அதன்பின்பு, அடக்கப்படும் தமிழினத்தின் அவல நிலை குறித்து, கரிசனை கொண்டு, குரல் எழுப்பும் சர்வதேச சமூகத்தவர்களை, சர்வதேச அரச சார்பற்ற தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளை, மனித உரிமைகளுக்காகப் பாடுபடும் சர்வதேசப் பிரமுகர்களை எல்லாம் 'வெள்ளைப் புலிகள்' என அழைக்கும் கலாசாரம் பரவியது.

இப்போது 'சிங்களப் புலிகள்', 'அரச இராணுவப் புலிகள்' என்ற வகையறாக்களும் வந்துவிட்டன. விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதான சிங்களவர்கள் 'சிங்களப்புலிகள்' எனப்படுகின்றனர். அதே சந்தேகத்தின் பேரில் கைதாகும் அரச இராணுவத்தினரை 'இராணுவப் புலிகள்' என்கின்றனர்.

இதேபோன்று, தற்சமயம் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் போன்றோருக்கும் 'புலி முத்திரை' குத்தப்படும் அளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

'யானை - புலி' ஒப்பந்தம்' ஒன்று இருப்பதாக ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தென்னிலங்கையில் பெரியளவில் பிரசாரம் செய்யப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 'பச்சைப்புலி' முத்திரை குத்தியதன் மூலம் தென்னிலங்கையில் அவரது வாக்கு வங்கி முறியடிக்கப்பட்டது. அதனால் சிங்கள தேசத்தின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்பை அவர் கோட்டை விட வேண்டியவரானார்.

அதன் பின்னர், இப்போது என்னவென்றால் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் கூட புலி முத்திரை குத்தப்படுகின்றது. தமது சகோதரரைக் கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் புலிகளிடம் அனுப்பி, அவர்களுடன் இரகசிய ஒப்பந்தம் செய்து, அதன் மூலமே ஜனாதிபதியாகத் தெரிவானார் மஹிந்த ராஜபக்ஷ என்ற குற்றச்சாட்டு நேற்றுவரை அவரது அணியிலிருந்த அவரது சகாக்களால் - மிக நெருக்கமானவர்களால் - இப்போது மெல்ல மெல்ல அவிழ்த்து விடப்படுகின்றது.

'யானை - புலி ஒப்பந்தம் என்று முன்னர் நாடு முழுவதும் திரிந்து, வாய் கிழியக் கத்திய ஜே. வி. பியினர், இப்போது 'மஹிந்த - புலிகள் இரகசிய ஒப்பந்தம்' பற்றிய குற்றச்சாட்டு எழுந்துள்ள இச்சமயத்தில் அது குறித்து அசாதாரண நிசப்தம் - மௌனம் - காக்கிறார்கள்.

வழமையாக 'ஊடகப் புலிகள்', 'வெள்ளைப் புலிகள்', 'சிங்களப் புலிகள்' குறித்துப் பலதும் பேசி, பலரையும் இந்த வகையறாக்குள் முத்திரை குத்தும் ஜே. வி.பியினர், ஜனாதிபதி மஹிந்தர் மீது புலி முத்திரை குத்தப்படும்போது மட்டும் அது விடயத்தில் அமுக்கி வாசிக்கின்றனர்.

'ஒரிஜினல்' புலிகள் யார் என்று தெரிந்தும் - அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பதும் தெரிந்திருந்தும் - அவர்களை நாடிச் சென்று அழிக்க முடியாத தென்னிலங்கை, இப்படித் தனது அரசியல் எதிரிகளை - கொள்கை ரீதியாகத் தம்முடன் முரண்பட்டு நிற்பவர்களை - 'புலி முத்திரை' குத்தி வஞ்சம் தீர்த்துத் திருப்திப்பட்டுக்கொள்ள முனைகிறது. அவ்வளவே.

தமிழ்த் தேசியம் பற்றிய எழுச்சியை - நினைப்பை - சிந்தனையை - அடக்கி, ஒடுக்கி விட வேண்டும் என்பதில் கங்கணம் கட்டி, முனைப்புடன் செயற்படுகிறது பௌத்த - சிங்களப் பேரினவாதம்.

அது, அரசின் யுத்த வெறிப்போக்கை விமர்சிப்பவர்களுக்கும், யுத்தத்திற்கு எதிராகப் பேசுபவர்களுக்கும், ஜனநாயக உரிமைகள், அடிப்படை மனித உரிமைகள் குறித்துக் குரல் எழுப்புபவர்களுக்கும் புலி முத்திரை குத்துவதன் மூலம் அவர்களின் வாயை அடைக்கச் செய்து, அதன் மூலம் பேரினவாத ஒடுக்கு முறையை முழு அளவில் கட்டவிழ்த்துவிடலாம் எனத் திட்டமிடுகின்றது.

தென்னிலங்கை வாக்காளர்கள் - மக்கள் - விவரம் புரியாத அரசியல் ஏமாளிகளாக இருக்கும்வரை இவ்வாறு புலி முத்திரை குத்தி அரசியல் பித்தலாட்டம் நடத்தும் வாய்ப்பந்தல் அரசியல்வாதிகளின் காட்டில் நல்லமழை பெய்து கொண்டிருக்கும் என்பது மட்டும் நிச்சயமே!

# மூதூர் மனிதநேயப் பணியாளர் படுகொலை; குற்றவாளிகளை நீதியின்முன் நிறுத்த வலியுறுத்தல்

## சர்வதேச ஜூரிகள் ஆணையம் அரசுக்கு அழுத்தம்

கொழும்பு,மார்ச் 16

மூதூரில் மனிதநேய பணியாளர்கள் 17பேர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான குற்றவாளிகளை கண்டுபிடிக்க உடனடி நடவடிக்கை எடுத்து அவர்களை நீதியின் முன் நிறுத்தும்படி சர்வதேச ஜூரிகள் ஆணையம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது.

சர்வதேச "கொன்ற லா பெய்ம்" (AFC) என்ற மனிதநேய அரசு சாரா பிரெஞ்சு நிறுவனத்தின் பணியாளர்கள் 17பேர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான நீதிவான் மட்ட விசாரணைகள் முடிவுற்றதைத் தொடர்ந்து சர்வதேச ஜூரிகள் ஆணையத்தின் உத்தியோகபூர்வ பார்வையாளர் மைக்கல் பேர்ன் பாம் (கியூசி) இக் கருத்தை வெளியிட்டார்.

நீதிவான் மட்ட விசாரணைகளை அவதானித்துள்ள அவர், குறித்த சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள புலன் விசாரணைகள் போதுமானவையாக இல்லை என்று நீதிபதிகள் சுட்டிக்காட்டியிருப்பதைக் குறிப்பிட்டார்.

''இந்தக் கொலைகளுக்கு யார் பொறுப்பாக இருந்துள்ளார்கள் என்பதைக் கண்டறிந்து முனைப்பான புலன் விசாரணைகளை சுதந்திரமாகவும் நம்பிக்கையூட்டும் விதத்திலும் நடத்துவதற்கு நீதித்துறைக்கு திராணியுண்டா என்ற விதத்தில் ஏற்பட்டுள்ள கவலைகளை அரசாங்கம் நீக்கியாக வேண்டும்'' என்றும் அவர் வலியுறுத்தினார்.

சகல இலங்கையர்களதும் நம்பிக்கையைப் பெற்ற ஓர் அமைப்பிடம் புலன்விசாரணைகளை ஒப்படைக்க வேண்டும். சாத்தியமில்லையென்றால் வேறு வெளியிலிருந்து உதவியை நாட வேண்டுமா என்பதை இலங்கை அரசு தீர்மானிக்க வேண்டும் - என்றும் அவர் சொன்னார். (ப)

## ஆன்மீகக் கல்வி வட்டம்

யாழ். மத்திய சத்திய சாயிபாபா நிலையத்தின் ஆன்மீகக் கல்வி வட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நல்லூர் கைலாச பிள்ளையார் கோயிலுக்கு சமீபமாக அமைந்துள்ள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் 'மனிதனின் துன்பத்துக்கு யார் காரணம்?'' என்ற பொருளில் சத்சங்கமம் நடத்துவார். (அ-1)

## சமாதானப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,மார்ச்16

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நாட்டில் சாந்தியும் சமாதனமும் வேண்டி நடத்தும் கூட்டுப் பிரார்த்தனை, இன்று காலை 7 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் இப்பிரார்த்தனை நடைபெறும். ஆத்மஜோதி மணி மண்டப பஜனைக்குழு நடத்தும் பஜனை நிகழ்வும் இடம்பெறும். (அ-202-79)

## பொலிஸில் சரணடைந்தோர் நேற்று நீதிமன்றில் ஆஜர்

உயிர் அச்சுறுத்தல் காரணமாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சரண் அடைந்திருந்த 14 பேர் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்குமாறு பதில் நீதிவான் எம்.திருநாவுக்கரசு உத்தரவிட்டார். கடந்த ஒரு மாதகாலமாக இவர்கள் யாழ். பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தனர். (அ-1)

## "ஸ்கிறபிள்" சுற்றுப் போட்டி

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான "ஸ்கிறபிள்" சுற்றுப்போட்டி நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலை மாணவர்களை, பாடசாலை அதிபர் ஊடாக யாழ்.இந்துக் கல்லூரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு யாழ்.இந்துக் கல்லூரி ஸ்கிறபிள் கழகம் கேட்டுள்ளது.

போட்டி நடைபெறும் நாளன்று காலை 8 மணிக்கு முன்னரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (203)

## கல்வியாளர் பரீட்சை

இலங்கை கல்வியாளர் சேவையில் IIIஆம் வகுப்பிற்கான நேர்முகப் பரீட்சையில் தோற்றத் தவறியவர்களுக்கு எதிர்வரும் 23ஆம் திகதி இசுருபாயவிலுள்ள கல்வியமைச்சில் பரீட்சை நடைபெறவுள்ளது.

குடாநாட்டிலிருந்து இப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு:

அ.அகிலதாஸ் (யாழ்ப்பாணம்), கே.தர்மசேகரம் (யாழ்ப்பாணம்), ஏ.சபேசன் (வட்டுக்கோட்டை), எ.நந்தசீலன் (சுண்டுக்குளி), எஸ். சிவகௌரி (யாழ். பல்கலைக்கழகம்), ரி. ராகுலேசன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஜெ.சந்திரப் பிரகாசம் (பருத்தித்துறை), ஞா. இரத்தினசிங்கம் (கல்வியங்காடு), அ.தயாபரன் (பருத்தித்துறை). (1-202)

# இந்தியாவில் இருந்து பொருள்கள் மாதத்தில் மூன்று தடவைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 16

இந்தியாவில் இருந்து பொருள்களை தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவதற்கான ஒழுங்குகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு தனிக்கப்பல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் கே. கணேஷ் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து மாதத்தில் மூன்று தடவைகள் கப்பல் மூலம் பொருள்கள் எடுத்துவரப்படும். ஒவ்வொரு தடவையும் 3 ஆயிரத்து 300 மெற்றிக்தொன் பொருள்கள் எடுத்துவரப்படும். இந்தியாவில் மலிவாக உள்ள முக்கியமான பொருள்களே இவ்வாறு எடுத்துவரப்படும். இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன - என்று அரச அதிபர் தெரிவித்தார். (அ-1-8)

# யாழ். சிறைக்கைதிகளுக்கு பொக்குளிப்பான் பரவும் அபாயம்

யாழ்ப்பாணம். மார்ச் 16

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு பொக்குளிப்பான் நோய் பரவுவதாக அறியப்படுகிறது.

யாழ். சிறைச்சாலையில் நூறு பேர்களையே தங்கவைக்கக் கூடிய வசதி உள்ளது. ஆனால் தற்போது இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் சிறைச்சாலையில் உள்ளதால் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இடநெருக்கடி காரணமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் சிலருக்கு பொக்குளிப்பான் கண்டுள்ளதால் கைதிகளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய முடியாதுள்ளது என்று சிறைச்சாலை அதிகாரிகள் நீதிமன்றத்துக்கு நேற்றுத் தெரியப்படுத்தினர். (அ-1)

# ஐ.தே.கவின் விசேட மாநாடு நாளை; மாற்றுக் குழுவினருக்கும் அழைப்பு

கொழும்பு, மார்ச் 16

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மாநாடு நாளை அதன் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் இடம்பெறவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும் இம்மாநாட்டுக்கு எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமை வகிப்பார். கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் முக்கிய பிரமுகர்களும் இதில் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அரசில் இணைந்துள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் மாற்றுக்குழுவினர் 18 பேருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இதில் கலந்துகொள்வதில்லை என்று மாற்றுக் குழுவினர் தீர்மானித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

மாற்றுக்குழுவினரின் தலைமையகமான கிரிபத்கொடவில் உள்ள செத்செவனவில் இது தொடர்பாக செவ்வாய்க்கிழமை மாற்றுக்குழுவினர் கூடி ஆராய்ந்தனர்.

நாளை நடைபெறவுள்ள விசேட மாநாடு சட்ட விரோதமானது என்றும் ஆகையால் இதில் கலந்துகொள்வதில்லை என்றும் அவர்கள் தீர்மானித்தனர். இருந்தும் தமது கட்சி உறுப்புரிமையைத் தக்க வைத்துக் கொள்வதற்கான அங்கத்துவக் கட்டணத்தைத் தொடர்ந்து செலுத்துவது என்றும் அவர்கள் தீர்மானித்துள்ளனர். (ஐ)

## சைவ பரிபாலன சபையின் சைவ நெறித் தேர்வு

யாழ்ப்பாணம், மார்ச்15

சைவ பரிபாலன சபையினர் நடத்தும் சைவநெறித் தேர்வு எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கான வினாத்தாள்கள் உரிய பரீட்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று சபையின் செயலாளர் தெரிவித்தார். யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி உள்ளிட்ட பல மாவட்டங்களில் இப்பரீட்சை இடம்பெறும். கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இப்பரீட்சை நடைபெறவிருந்து பின்னர் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-1-203)

## கல்கிஸையில் 13 பேர் கைது

கல்கிஸையில் கஹதொடுவ பகுதியில் 6 தமிழ் இளைஞர்கள் உட்பட 13 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று கல்கிஸை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட தேடுதலின்போது சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனவும் இவர்கள் விசாரணைகளின் பின் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (சி)

## நாளை

பங்குனி - 03
சனிக்கிழமை
17.03.2007
திதி: திரயோதசி
பி.ப : 01.13
நட்சத்திரம்: அவிட்டம்
முற்பகல் : 10.10
சுபநேரம் : 03.59 - 04.49
ராகுகாலம் : 09.19 - 10.49

## குடாநாட்டின் குட்டிச் செய்திகள் - யாழ்ப்பாணம்

### விஞ்ஞான பீட புதுமுக மாணவருக்கு 22இல் கற்றல் செயற்பாடுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்16

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தின் 2005 - 2006 கல்வியாண்டு மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு புகுமுக மாணவர்களுக்கான ஒன்றுகூடலும் வரவேற்பு நிகழ்வும் இடம்பெறும்.

பதிவுசெய்த சகல மாணவர்களையும் அன்றைய தினம் சமுகமளிக்குமாறு யாழ்.பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் கேட்டுள்ளார்.

இதேவேளை -

இந்த மாணவர்களுக்கான விரிவுரைகள் அடுத்த மாதம் 9ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-202-79)

### உணவுப் பொருள் கொண்ட தபால் பொதிகள் வருகின்றன

யாழ்ப்பாணம்,மார்ச் 16

திருகோணமலையில் தேங்கிக் கிடந்த உணவுப் பொருள்கள் அடங்கிய 5 ஆயிரத்து 355 தபால் பொதிகள் 'ஜால' கப்பலில் எடுத்துவரப்படுகின்றன.

வட பிராந்திய பிரதித் தபால் மா அதிபர் வி.குமரகுரு இத் தகவலை நேற்றுத் தெரிவித்தார்.

கப்பல் இன்று காங்கேசன்துறையை வந்தடைந்ததும் தபால் பொதிகள் இறக்கப்பட்டு தரம்பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும்.

திருமலையில் இன்னமும் தேங்கிக் கிடக்கும் உணவுப் பொருள் அடங்கிய 6ஆயிரம் தபால் பொதிகளையும் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றும் அவர் கூறினார். (அ-1-88-111)

### பங்கீட்டு அட்டைக்கு நல்லெண்ணெய் விநியோகம்

நல்லூர், மார்ச்16

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் உள்ள குடும்பங்களுக்கு ப.நோ.கூ. சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்படும் நானாவிதப் பொருள்களில் இம்முறை நல்லெண்ணெயும் வழங்கப் படவுள்ளது.

ஒன்று, இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 1/4 போத்தல் நல்லெண்ணையும் மூன்றும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 1/2 போத்தல் நல்லெண்ணையும் வழங்கப்படவுள்ளதாக யாழ்.பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை-

குறைந்த அளவு ஆட்டமா கையிருப்பில் உள்ளதால் நோயாளர்கள் தமது அத்தாட்சிகளைக் கிராம அலுவலர் ஊடாக உறுதிப்படுத்தி யாழ். பிரதேச செயலரின் அனுமதியைப் பெற்று ஆட்டாமாவைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் ஆடை நீக்கிய அங்கர் பால்மா, கிறீம் கிறாக்கர், பால்மா வகைகள் ஆகியன முடிவடைந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202-111)

### மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச்16

இருபாலையில் இயங்கும் ஏ.எம்.ரி.ரான்ஸ்போட் நிலையத்தில் இன்றுமுதல் குடும்ப அட்டைகளுக்கு 4 லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது.

ஜே/257, ஜே/258, ஜே/259, ஜே/260 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்ப அட்டைகளுக்கே மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படும். (203)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்16

'மாக்பெட்' எரிபொருள் நிலையத்தில் மார்ச் மாதத்துக்கான மண்ணெண்ணெய் விநியோகம் இன்று இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (1-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு அகதிகளுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியத் தூதருடன் பிரதித் தூதர் மாணிக்கமும் இச்சந்திப்பில் பங்குபற்றினார்.

இலங்கை அரசுப் படைகள் கிழக்கில் விடாது தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் இராணுவத் தாக்குதல்களால் இடம் விட்டு ஓடி அல்லலுறும் ஒரு லட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்களின் மனித அவலத்தின் மீது இந்தியா தனது கரிசனையையும் கவனத்தையும் திருப்பவேண்டும். - என்று கூட்டமைப்பு எம். பிக்கள் இந்தி யத் தூதரிடம் கோரினர்.

**அடிப்படை வசதிகளின்றி அவதி**

மட்டக்களப்பு மாவட்டத்தில் மொத்தம் ஒரு லட்சத்து 52 ஆயிரம் பேர் உள்நாட்டில் இடம்பெயர்ந்த அகதிகளாகியுள்ளனர். இவர்களுக்கு அவசர மனிதாபிமான உதவி கள் கிட்டவில்லை. மரங்களின் கீழும் அடிப்படை வசதிகளற்ற கூடாரங்களிலும் இந்த மக்கள் இராப்பகலாகத் தங்கி உள்ளனர். கூடார வசதிகளும் கழிப்பிட வசதிகளும் போதுமானவையாக இல்லை. மனிதப் பேரவலத்தில் சிக்குண்டுள்ள இந்த மக்களுக்கு இந்தியா உதவவேண்டும். இந்தியா விடமிருந்து நிவாரண உதவிகளை நாம் எதிர்பார்க்கின்றோம்.

குடிதண்ணீர் வசதி, குழந்தைகளுக்குப் பால்மா, கூடாரங்கள் என்பன அவசரமா கத்தேவைப்படுகின்றன. இந்தியாஇவற்றை வழங்கி உதவ முன்வர வேண்டும். அத்துடன் கிழக்கில் தமிழர் கிராமங்கள் மீது அரசுப்படைகள் நடத்திவரும் விமானக் குண்டுவீச்சு, ஷெல் பீரங்கித் தாக்குதல் களைத் தடுத்து நிறுத்தி, போர் வழிமுறை யைப் பின்பற்றும் இலங்கை அரசை இந்தியா கண்டிக்க வேண்டும்.

- இவ்வாறு இந்தச் சந்திப்பின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக் கள் இந்தியத் தூதரிடம் கேட்டுக்கொண் டனர்.

★ புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் படுவான்கரை கிராமம் மீது நடத்தப் பட்டுவரும் ஷெல் தாக்குதல்களை உடன டியாகத் தடுத்து நிறுத்தவேண்டும்.

★மட்டக்களப்பு நகரில் பொது அலுவ லகங்கள் மத்தியில் வெபர் விளையாட்டு அரங்கைச் சூழ நிறுவப்பட்டிருக்கும் இரா ணுவத் தளங்களை அப்புறப்படுத்த இந்தியா உதவவேண்டும்.

இவ்வாறு மேலும் கூட்டமைப்பு எம். பிக்கள் இந்தியத்தூதரிடம் கேட்டுக்கொண் டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன் வைத்த இந்தக் கோரிக்கைகளை புது டில்லி அரசுக்கு தெரியப்படுத்துவதாக இந்தியத்தூதர் அலோக் பிரசாத் உறுதி அளித்தார். (சி)

## சர்வதேச தொண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2007ஆம் ஆண்டுக்கு 67 மில்லியன் டொலர்கள் தேவை என மதிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் இது வரை அத்தொகையில் 4 சதவீதமான தொகையே ஐ.நாவுக்குக் கிடைத்துள்ளது- என்று ஐ.நாவின் மனி தாபிமான விவகாரங்களுக்கான கொழும்பில் உள்ள இணைப்பு அலுவலகம் தெரி வித்துள்ளது. (அ-1)

## பேச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இப்போது பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் ஒன்று நடைபெறுகின்றது. பல லட்சக்கணக்கானோர் அகதிகளாக்கப்பட்டுள் ளனர்.

எப்பொழுது இதற்கு ஒரு முடிவு ஏற் படும் என செய்தியாளர்கள் அமைச்சரிடம் கேட்டனர். அப்போது அமைச்சர் கூறியதாவது:-

நாம் யாருடனும் யுத்தம் செய்யவில்லை. பல வருடங்களாக புலிகளின் கட்டுப்பாட்டில் அடக்குமுறைகளினால் சிக்குண்டிருந்த தமிழ் மக்களை விடுவிக்கும் பணிகளைத்தான் மேற்கொண்டு வருகின்றோம்.

இப்பொழுது கூட நாம் புலிகளுடன் பேசத் தயார். பேச்சுகளின் மூலம்தான் பிரச்சினைக்கு ஒரு தீர்வை ஏற்படுத்த முடியும் என்பதில் நாம் உறுதியாகவே இருக்கின்றோம் - என்றும் அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா கூறினார். (சி)

## மட்டக்களப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திறப்புவிழா வைபவம் தொடர்பான பொதுக்கூட்டத்தில் ஆயர்கலாநிதி சுவாம் பிள்ளை உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது-

இன்று நாம் வாழும் நிலை இக்கட்டான சூழ்நிலையாகவுள்ளது. அனர்த்தங்கள் மாறி, அனர்த்தங்களே எமக்குச் சொத்தாகவுள்ளன.

இதற்குப்பிறகும் எமக்கு, எமது மக்களுக்கு வேறு என்ன அனர்த்தம் நடக்கப்போகின்றது என்பதே தெரியாது அச்சம் கொள்ளவேண்டியுள்ளது.

இன்று நாம் அச்ச சூழ்நிலையிலும் நிச்சயமற்ற சூழ்நிலைகளிலும் வாழ்ந்துவருவது எமக்கு உரித்தாகவுள்ளது.

அதிலும் மட்டக்களப்பு மாவட்டம் இன்னும் மோசமாகத் தற்பொழுது திகழ்கின்றது. மட்டக்களப்பு மாவட்டம் அகதிகள் நகரம் என்றே இன்று கூறவேண்டியுள் ளது.

ஷெல்லடிபட்டுச் சாவதிலிருந்து தப்பு வதற்காக அல்லல்பட்டு தமது வதிவிடங் களை விட்டு அகதிகளாக ஒவ்வொரு நாளும் மக்கள் இடம்பெயர்ந்து வந்த வண்ணமேயுள்ளனர்.

படுவான்கரைப் பகுதியிருந்து கடந்த ஒருவார காலமாக இடம்பெயர்ந்துவரும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ண மேயுள்ளது.

**ஒன்றரை லட்சம் பேர் இடம்பெயர்வு என்பது உண்மையான தகவல்**

அங்கிருந்து செல்லடிபட்டு சாவதை விட இடம் பெயர்ந்து இக்கட்டான சூழ்நிலையில் அவர்கள் வாழ்கின்றனர். இன்று ஒன்றரை லட்சம் அகதிகளுக்கு மேல் வந்துள்ளனர் என்பது உண்மையான தகவலாகும்.

முன்னர் மூதூர் - சம்பூர் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து வந்தனர். பின்னர் மட்டக்களப்பு வாவிக்கு மேற்கேயிருந்து 90வீதத்துக்கு மேற்பட்ட மக்கள் வந்துள்ளனர்.

இந்த உண்மையைப் புள்ளிவிவரங்கள் வெளிப்படுத்தினால், சிலருக்கு உள்ளத்தில் அதிருப்தி தோன்றுகின்றது.

அரச பேச்சாளர் இந்த உண்மை நிலையை மறுத்துரைத்தாலும் ஆச்சரியமில்லை.

எல்லாமே சுமுகமாகவே உள்ளது என அவர்கள்கூறும் சூழ்நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

உண்மையை வெளிப்படுத்த முடியாத சூழ்நிலையில் நாம் வாழ்ந்து கொண்டி ருக்கின்றோம்.

உண்மையைக் கூறினாலும் அது இன்று உத்தியோக பூர்வமாக மறுக்கப்படுகின்றது. ஆனால் இங்கு அல்லல்படுபவர்களுக்குத்தான் தெரியும் அவர்களது கஷ்டத்தின் தாக்கம். - என்றார் ஆயர். (அ-சி)

## தமிழக மீனவர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கமுடியும். எமது ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில், விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. அந்தச் சமயத்தில் போர் காரணமாக அகதிகளாக வெளியேறிய இலங்கைத் தமிழர்கள் மீண்டும் சொந்த மண்ணுக்குத் திரும்பினர். தற்போது, அந்த நிலை மாறிவிட்டது. கடந்த 2006ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2007ஆம் ஆண்டு மார்ச் வரை 17ஆயிரத்து 889 தமிழர்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர். இவர்களில் 27 சதவீதம் பேர் குழந்தைகள். 34 சதவீதம் பேர் பெண்கள், 39 சதவீதம் பேர் ஆண்கள்.

இந்தச் சமயத்தில், தமிழக அரசுக்கும் மத்திய அரசுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். காரணம், தமிழகத்திலுள்ள 111 அகதிகள் முகாம்களில் 50ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் தங்கியுள்ளனர். இலங்கைத்தமிழர்கள் பிரச்சினையை அணுகுவது குறித்து எதிர்க்கட்சியும் இலங்கை அரசும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டன. ஆனால், தற்போது அந்த ஒப்பந்தத்தை அழிக்கும் வகையில் ஜனாதிபதி செயல்பட்டு வருகிறார். அறிவிக்கப்படாத போரை இலங்கையில் திணிக்க முயற்சிக்கிறார் - எனக் குறிப்பிட்டார் ஜயலத்.

## ஆஸிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் செயலில் ஈடுபடும் கடத்தல்காரர்களுக்கு இதன்மூலம் உறைப்பானசெய்தி ஒன்றைத் தெரிவிக்க ஆஸ்திரேலிய அரசு தீர்மானித்திருக்கிறது என்றும் அந்நாட்டின் குடியேற்ற அமைச்சர் அன்றூ கெவின் தெரிவித்திருக்கிறார்.

**பல ஆண்டுகள் அவலப்பட நேரிடும்**

ஆனால் தஞ்சம் கோரிவந்த அகதிகளை நவ்று தீவில் தடுத்துவைப்பது என்ற ஆஸி. அரசின் முடிவை அகதிகளுக்காக வாதாடும் அங்குள்ள சட்டத்தரணிகள் கண்டித்திருக்கின்றனர். பசுபிக்தீவில் இவர்கள் அடைக்கப்படுவதன் மூலம் அவர்களது தஞ்சக் கோரிக்கை தொடர்பாக முடிவு எடுக்கப்படும் காலம்வரை - பல ஆண்டுகாலம் - அவர்கள் துன்பப்பட வேண்டி இருக்கும் என்று சட்டத்தரணிகள் எச்சரித்திருக்கின்றனர்.

83 படகு அகதிகளில் சிறுவன்(மைனர்) ஒருவனும் அடங்குவதாகவும் அவன் பெற்றோர், பாதுகாவலர் எவருமற்றவன் என்று அகதிகள் நடவடிக்கைக் குழுவைச் சேர்ந்த கார்த்தே கௌதியர் தெரிவித்தார்.

இதற்கிடையில் -

மேற்படி இலங்கை அகதிகளில் 31வயதான இளைஞர் ஒருவருக்கு தலையில் ஏற்பட்ட காயத்துக்காகச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த மருத்துவ சிகிச்சைக்காக ஆஸ்திரேலியாவின் பிரதான நிலப்பரப்பில் உள்ள மருத்துவமனை ஒன்றுக்கு அவர் விமானம் மூலம் அழைத்து வரப்பட்டிருக்கிறார் என்று குடியேற்ற அமைச்சர் அன்றூ கெவின் தகவல் வெளியிட்டிருக்கிறார். மருத்துவ சிகிச்சை முடிந்ததும் அவர் நவ்று தீவுக்கு கொண்டுசென்று ஏனைய அகதிகளோடு சேர்க்கப்படுவார் என்றும் அமைச்சர் தெரிவித்திருக்கின் றார். (அ-சி)


## பதவி வெற்றிடம்

கரந்தன் - நீர்வேலியிலுள்ள **"கருணாலயம்"**

**அன்னை கிருஷ்ணாபாய் சிறுவர் இல்லம்** (ஆண் பிள்ளைகளுக்கானது)

**மேற்படி இல்லத்திற்கு பின்வரும் பணிகளுக்கு வெற்றிடங்கள் உண்டு.**

1) சிறுவர் பராமரிப்பாளர்.
2) உதவி சிறுவர் பராமரிப்பாளர்.
3) பாகசாலை ஊழியர் (உணவு தயாரிப்பாளர்).

மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். சிறுவர் பராமரிப்பாளர்களுக்கு இளைப்பாறிய அதிபர், ஆசிரியர், உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. ஏனையோரும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதி உண்டு. வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேற்படி இல்லம் கரந்தன் நீர்வேலிப் பகுதியில் அமைந்திருப்பதால் அந்த எல்லைக்குள் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

உங்கள் விவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை தபாலில் அல்லது நேரில் "பொறுப்பாளர், கருணாலயம், அன்னை கிருஷ்ணாபாய் மகளிர் இல்லம், இல.131, பலாலி வீதி, திருநெல்வேலி." என்ற முகவரிக்கு 23.03.2007 இற்கு முன் அனுப்பிவைக்கவும். **பொறுப்பாளர்.**

(58886)

## மாநகர சபை, யாழ்ப்பாணம்

## ஆதனவரி அறிவித்தல் - 2007

2007ஆம் ஆண்டு முதலாம் கந்தாயத்திற்கான ஆதனவரியை 2007-03-30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு முன்பாக எவ்வித தண்டமுமின்றி இவ்வலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப் பணத்திற்கு மேலதிகமாக கீழ்க்குறிப்பிடப்படும் விவரப்படி வெலியாற்றுப்பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

| | |
|---|---|
| வெற்றுக்காணிகள் மற்றும் குடியிப்புக்காணிகள் | - 15% |
| ஏனைய காணிகள் | - 20% |

நிலுவை உட்பட 2007ஆம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் மாநகர சபை கட்டளைச்சட்டம் அத்தியாயம் 252, பிரிவு XII 252 (1) இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

காசோலையாகச் செலுத்துவோர் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**மு.செ.சரவணபவ,**
**மாநகர ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

(சி/50807)

## காணி விற்பனைக்கு

**சுன்னாகம், மயிலணி, ஜெற்மோட்டோஸ் ஒழுங்கையில் ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**தொடர்பு : [illegible]**


## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஐயாத்துரை பொன்னம்மா



வேளாதோப்பு, இருபாலையைப் பிறப்பிடமாகவும் செங்குந்த வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பொன்னம்மா 12.03.2007 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரையின் (முன்னாள் நெசவு ஆசிரியர்) அன்புத் துணைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப் பிள்ளை (முன்னாள் வர்த்தகர்) - பறுவதம் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் இராசையாவின் (நெசவு மேற்பார்வையாளர்) சகோதரியும் திவ்வியபிறேமா, வித்யாசாகர் (பிரான்ஸ்), இரவீந்திரராஜா (அமெரிக்கா), தர்மரெட்ணம் (பிரான்ஸ்), மகேஸ்வரன் (லண்டன்), ரஞ்சினி (லண்டன்), ஜெயராசா (லண்டன்), ஜெயபாலன் (திருகோணமலை), உஷாந்தினி ஆகியோரின் பாசமிகு தாயும் கணேசன், பத்மா (பிரான்ஸ்), தவமணி (அமெரிக்கா), யோகமணி (பிரான்ஸ்), யமுனா (லண்டன்), சுத்தானந்தன் (லண்டன்), சாந்தகுமாரி (ஆசிரியை, திருகோணமலை), விஸ்வநாதன் (வர்த்தகர்) ஆகியோரின் அன்பு மாமியும் பிறேம்ராஜ், விபூசனா, பிரதீபா, கணதீபன், நிறோசன், யதுர்சன், சுலக்சன், சுகாஸ்சன் ஆகியோரின் ஆசைப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2007) வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செங்குந்த வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

(58859)

தகவல்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

### சின்னத்தம்பி கந்தையா

(நாயன்மார்கட்டு)



நாயன்மார் கட்டைச் சேர்ந்த சின்னத்தம்பி கந்தையா நேற்று (15.03.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற யோகேஸ்வரன்(பவான்) மற்றும் கேதீஸ்வரன் (கேவினாத் மோட்டோர்ஸ்), ஜெகதீஸ்வரன், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி மற்றும் மகேஸ்வரன், லிங்கேஸ்வரன், அகிலேஸ்வரி (யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்), ஞானேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் லூர்தினாநிலா, விமலராணி, சுவந்தினி, நாகேஸ்வரி, ரஞ்சிதம் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(16.03.2007) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11 மணிக்கு தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*41/64,ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை,*
*நாயன்மார்கட்டு, நல்லூர்.*

(58871)

தகவல்:
**குடும்பத்தினர்.**

### இரத்தினம் சிவபாக்கியம்



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சிவபாக்கியம் நேற்று (15.03.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நித்தியானந்தராசா, முத்துலிங்கராசா (கிளி), கமலா மற்றும் புனிதவதி (முல்லைதீவு), அருளானந்தராசா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் சுப்பிரமணியம், அரசரட்ணம், தேவி, பரமேஸ்வரி, நோநா, சுமதி ஆகியோரின் பாசமிகு மாமியும் மாணிக்கவாசகர் (வவுனியா), கனகாம்பிகை, சரஸ்வதி, காலஞ்சென்ற சுபத்திரை அம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சுபோதினி, சுதர்சினி, கயந்தன், சந்திரிக்கா, கபில்தேவ் (பிரான்ஸ்), நிஷாந்தினி, கமல், நிருபராஜ், நிரஞ்சன், தங்கா(முல்லைத்தீவு), ராசாத்தி (துஜி, கிளிநொச்சி), ராயு, மணிவண்ணன், தர்மேந்திரா, சுரேந்திரன் (வவுனியா), நளினி (பிரான்ஸ்), துஜிந்திரா (ஜேர்மனி), சுமித்திரா (ஜேர்மனி), கமலாஜினி (கனடா), நிமாலினி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.03.2007) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மாரியம்மன் வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

(58872)

தகவல்:
**அ.சுபோதினி**
*(பேர்த்தி).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*